1973 டிசம்பர் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர் ஊதியம் கேட்கவில்லை. கேட்க வேண்டிய நிலையிலும் இல்லை. பொதுமக்களே பார்த்து ஏராளமான தொகை அவருக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள்.

இராமலிங்க அடிகளாருக்கு நினைவுச் சின்னம்

*541 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அருட்பா வழங்கிய இராமலிங்க அடிகளார் பிறந்த இல்லத்தை விலைக்கு வாங்கி அதனை நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தமிழகத்தில் சமரச சுத்த சன்மார்க்க நெறியினை பரப்ப அருந்தொண்டாற்றிய இராமலிங்க அடிகளார் வடலூரில் வாழ்ந்த இல்லத்தினை நினைவுச் சின்னமாக அரசே ஏற்று அமைக்க இனிமேலாவது அந்த முயற்சியில் ஈடுபட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல்பொருள் ஆராய்ச்சியினர் பழங்காலச் சின்னங்கள் என்ற முறையில் எடுத்துக்கொள்வனவற்றை ஏற்றுக்கொள்கிறோம். இப்போது இராமலிங்க வள்ளலார் இல்லத்தை நினைவுச் சின்னமாக எடுத்துக் கொள்வதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஊர்க்காரர்களும், மற்றவர்களும் அரசாங்கமே அப்படி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்வார்களானால் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

திரு. கே. கந்தசாமி : அந்த ஊர்க்காரர்களும், மற்றவர்களும் அரசே நினைவுச் சின்னமாக வள்ளலார் வாழ்ந்த இல்லத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்வார்களானால் அதை கவனிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இல்லையென்றாலும் தேச விடுதலைக்காகப் பாடுபட்ட சிதம்பரனார், பாரதியார் போன்றவர்கள்

வாழ்ந்த இல்லங்களை நினைவுச் சின்னங்களாக ஆக்கியிருப்பதைப் போல, சமுதாய நன்மைக்காக சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவி சமூகப்பணியாற்றியுள்ள வள்ளலாரின் நினைவு அகலாதிருக்க அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக அமைப்பதனால் சமுதாயம் வாழும் அல்லவா? இதை ஏன் அரசு செய்யக்கூடா தென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வள்ளலார் அமைத்த ஞானசபை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் வாழ்ந்த இல்லம் பற்றி சிலபல குழப்பங்கள் இருக்கின்றன. உண்மையாகவே அவர் வாழ்ந்த வீடு இருந்து, அதை அரசே நினைவுச் சின்னமாக அமைக்கவேண்டுமென்று அவ்வூர்க்காரர்களும், மற்றவர்களும் விண்ணப்பித்துக்கொள்வார்களானால் அந்த முயற்சிக்கு அரசு ஆக்கம் அளிக்கும்.

திரு. இ. எஸ். தியாகராசன்: இராமலிங்க அடிகளார் எங்கே பிறந்தார்கள்? அவர் பிறந்த ஊர் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர் பிறந்தது மருதூர். பிறகு வந்து சேர்ந்தது வடலூர். வடலூரில்தான் ஞான சபையை அமைத்தார்கள். அங்கேயே மறைந்துவிட்டார்கள் என்றும் கதைகள் வருகின்றன. அவை எல்லாம் பல்வேறு ஆராய்ச்சிக்குரியன.

திரு. கே. டி. கே. தங்கமணி: வள்ளலார் அவர்கள் சமீப காலத்தில்தான் வாழ்ந்தார்கள். வடலூரினால்தான் நெய்வேலிக்கே ஒரு பெருமை ஏற்பட்டது. இதன் காரணத்தினால் வள்ளலார் தங்கி, வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வடலூரில் வள்ளலார் அமைத்த சன்மார்க்க சங்கம் இருக்கிறது. ஞானசபை அமைந்திருக்கிறது. அதற்குரிய சொத்துக்கள், பொருள்கள் எல்லாம் அறநிலைய பாதுகாப்பு இலாக்காவினரால் பாதுகாக்கப் படுகின்றன. மருதூரில் அவர் பிறந்த வீடு என்று இருக்குமானால் அதை அரசாங்கம் நினைவுச் சின்னமாக அமைக்க முயற்சி எடுத்துக் கொள்ளும்.